ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




| வேணு : 8 | நவம்பர் - 2002 | கானம் : 4 |
|---|---|---|


www.madhuramurali.org



ஸ்ரீ ஹரி:

**மாதுரிஸகீ ஸமேத**
**ஸ்ரீ ப்ரேமிகவரதனின்**
**நவராத்ரி உத்ஸவம்**
**07-10-2002 முதல் 14-10-2002 வரை**





ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

வேணு : 8 நவம்பர் 2002 கானம் : 4

## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 84 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 5 |
| 4. | வேத கதைகள் - 65 | 8 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 55 | 12 |
| 6. | ஸனாதனப் புதிர் - பகுதி - 19 | 17 |
| 7. | சேதுபாலம் | 18 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 59 | 20 |
| 9. | மாலே மணிவண்ணா - 2 | 22 |
| 10. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 10 (தொடர்ச்சி) | 27 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 86 | 30 |


ऋतंतपस्सत्यं तपश्श्रुतं तपश्शान्तं
तपोदमस्तपश्शमस्तपो दानंतपो
यज्ञंतपो भूभर्वस्सुवर्ब्रह्मैतदुपास्यै तत्तपः

எப்பொழுதும் மனதில் உண்மையையே நினைப்பது, உண்மையையே பேசுவது உயர்ந்த வேத - இதிஹாஸ - புராணங்களைக் கற்பது, கேட்பது, அமைதியாக இருப்பது, மனதையும், இந்த்ரியங்களையும் வெளிவிஷயங்களில் அலையவிடாமல் அடக்கி பொறுமையாக இருப்பது, பிறருக்கு தானம் வழங்குவது, பிறர் சொத்துக்கு ஆசைப்படாமல் இருப்பது, பகவானை பூஜிப்பது, பகவந்நாமாவை விடாமல் ஜபிப்பது, தான் பரமாத்ம ஸ்வரூபம் என்று உணர்வது, இவையனைத்தும் தபஸ் ஆகும்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : ஸாமா தாளம் : ஆதி

*பல்லவி*

***தீப ஜ்யோதியாய் வருவாய் - சிரவண***
***திருமலை திருப்பதி வேங்கடேஶ (தீப)***

*அனுபல்லவி*

***சங்கடங்களை தவிர்த்து மங்களங்கள் பலவருளும்***
***வேங்கடரமண பங்கஜலோசன (தீப)***

*சரணங்கள்*

***மறைபொருளாகி மலைமீது வீற்றிருக்கும்***
***மன்னுபுகழ் கலியுக வரதனே (தீப)***

***குலம் தழைக்க வந்திடும் நலம் பல நல்கிடும்***
***கருணைமழை பொழியும் கார்முகில் வண்ணனே (தீப)***

***காமதேனுவே கற்பகதருவே***
***ஸாமகானப்ரிய முரளீதரனே (தீப)***

*நாமாவளி*

***வேங்கடரமண கோவிந்த***
***சங்கடஹரண கோவிந்த***
***ஸ்ரீநிவாஸ கோவிந்த***
***ஸ்ரீவேங்கடேச கோவிந்த***

ஸ்ரீ ஹரி:

ப்ரதி வருடம், நவராத்ரி உத்ஸவம் சென்னை ப்ரேமிகபவனத்தில் நடப்பது வழக்கம். இந்த வருடம், நவராத்ரி உத்ஸவம் மதுரபுரி ஆஶ்ரமத்தில் அக்டோபர் 7-ஆம் தேதி முதல் ஆரம்பித்து நடைபெற்றது. மதுரபுரி, பாகவதபவனத்தில் கொலு வைக்கப்பட்டிருந்தது. பெங்களூர் பாகவதர் ஸ்ரீ நாராயணன் அவர்களால் திங்கள் முதல் ஆரம்பித்து ஸ்ரீமத் ராமாயண நவாஹ பாராயணம் நடைபெற்றது. ப்ரஹ்மஸ்ரீ கல்யாணராமன் அவர்களால் ரிக்வேத பாராயணம் நடைபெற்றது. சென்னை ப்ரேமிகபவனத்தில், ப்ரஹ்மஸ்ரீ கண்ணன் தீக்ஷிதரின் யஜுர்வேத பாராயணமும், துர்கா ஸப்தஶதி பாராயணமும் நடைபெற்றது. சென்னை ஆலப்பாக்கத்தில் ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்களால் ஸ்ரீமத் ராமாயண நவாஹ பாராயணம் நடைபெற்றது.

மதுரபுரி ஆஶ்ரமத்தில் கலஸம் ஸ்தாபிக்கப்பட்டு அதில் துர்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி ஆவாஹனம் செய்யப்பட்டு நித்யம் பூஜை நடைபெற்று வந்தது. தினமும் காலையில் வேத கோஷத்துடன், ஸ்ரீ ஸ்வாமிகளால் மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு நவராத்ரி பூஜை ப்ரத்யேகமாக, விசேஷமாக நடைபெற்றது. தினமும் பூஜை முடிவதற்கு பகல் ஒரு மணி ஆகிவிடும். பூஜை முடித்து அனைவரும் தீர்த்த ப்ரஸாதம் பெற்றுக்கொண்டார்கள். மாலை 4 மணிக்கு திருச்சி ஸ்ரீ ஐயப்பன் அவர்களின் ''கம்பராமாயணம்'' உபந்யாஸம் நடைபெற்றது. கம்பராமாயணம் மட்டுமன்றி மஹான்களின் வாழ்க்கையில் நடந்த சில அரிய ஸம்பவங்களை அவர் எடுத்துரைத்தது ரஸமாக இருந்தது.

தினமும் மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனை ஊஞ்சலில் எழுந்தருளச்செய்து ''ராதிகா ஶதகம்'' கீர்த்தனங்கள் பாடப்பட்டது. இந்த முறை ''ராதிகா ஶதகம்'' பஜனை மிகவும் **பா**வமாக

அமைந்தது விசேஷமாகும். பஜனை முடிந்ததும் ஸ்ரீ ஸ்வாமிகள் ராதிகா ஸதகத்திலுள்ள ரஸோக்திகளையும், பக்தி **பா**வங்களையும் பற்றி ஸத்ஸங்கத்து அன்பர்களுடன் ஸம்பாஷித்துக்கொண்டு, அதே சிந்தனையில் இருந்தார்கள்.

அக்டோபர் 8-ஆம் தேதியன்று திருமதி லீலா குழுவினரின் திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. 10-ஆம் தேதியன்று, நாரத வர்ஷா குழுவினரின் வீணை கச்சேரி நடைபெற்றது. 12-ஆம் தேதியன்று ஸ்ரீ ராமசந்திரா மருத்துவக்கல்லூரியைச் சேர்ந்த Professor of Medicine Dr. குருமூர்த்தி அவர்களுடைய சகோதரரின் பெண் சௌ. சௌம்யா அவர்களின் ஸங்கீதக் கச்சேரி நடைபெற்றது. கச்சேரி மிகவும் நன்றாக இருந்தது. ''தேவதேவ கலய'' என்று ஆரம்பித்து ''ஸந்தான கோபால க்ருஷ்ணம்'', ''குறையொன்றுமில்லை'' போன்ற கீர்த்தனங்களை அவர் மிகவும் இனிமையாகப் பாடினார்.

13-ஆம் தேதியன்று ஸ்ரீ ராஜசேகர் (CARVA) மற்றும் அவரது வித்யார்த்திகளின் Violin கச்சேரி நடைபெற்றது. 14-ஆம் தேதியன்று ஸ்ரீகாஞ்சி காமகோடி மடத்தில் ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளிடம் அத்யந்தமாக கைங்கர்யம் செய்து வரும் ஸ்ரீதியாகு அவர்களின் தாயார் சித்தூர் ஸரஸ்வதி அம்மாளின் ஹரிகதை நடைபெற்றது. இவைத் தவிர, தினமும் இரவில் திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

இந்த முறை, நவராத்ரி உத்ஸவத்தில் கலந்துகொண்ட அனைவருமே பக்திபூர்வமாக பகவத்விஷயத்தில் ஈடுபட்டதால், ஒன்பது நாட்களும் ஆஶ்ரமம் தபோவனமாகவே இருந்தது.

அக்டோபர் 15-ஆம் தேதி புரட்டாசி ஶ்ரவணத்தன்று சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளின் 'அவதார உத்ஸவம்' கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிகள், ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு ஶ்ரவண தீபம் ஏற்றினார்கள். அன்று மதியம் அஷ்டபதி பஜனையும், இரவு திவ்யநாம ஸங்கீர்த்தனமும் நடைபெற்றது.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : எனக்கு ஜபம், தியானம் செய்யும்பொழுதெல்லாம் உடம்பில் ஒரு நடுக்கம் ஏற்படுகின்றது. ஏன்?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : நீங்கள் சரியான முறையில் ஜபம் - தியானம் செய்து வருகின்றீர்களா என்பது எனக்குத் தெரியாது. தகுந்த குருவைக் கொண்டு ஜபம் செய்து வரவும். சரியான வழியில் செய்து வந்தாலும் உடம்பில் இது போல் நடுக்கம் எல்லாம் ஏற்படும். இது உடலில் நாடி சுத்தி ஆவதை காண்பிக்கின்றது.

*கேள்வி : நான் முற்பிறவியிலேயே ஸாதனைகள் எல்லாம் செய்திருக்கின்றேன் என்றும், என்னுடைய குருவிற்கும் எனக்கும் பல பிறவிகளாக தொடர்பு உண்டு என்றும் எனது குரு சொல்லி உள்ளார். நான் அவரை முதல்முதலாக பார்த்ததே என்னுடைய நாற்பத்தி ஐந்தாவது வயதில்தான். முற்பிறவி தொடர்பு இருந்த போதிலும் ஏன் என்னுடைய குருவை சந்திப்பதற்கு இத்தனை ஆண்டுகள் ஆயிற்று?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : புரந்தரதாஸர் நாரதருடைய அம்ஸமாகவே அவதரித்தார். ஆனாலும், அவர் 30 வயது வரை வட்டி வியாபாரம் செய்துகொண்டிருந்தார். அதுபோல், ஒரு கணத்திலே ஞானம் அடைந்த ரமணரும் திருவண்ணாமலைக்கு தன்னுடைய 16 வயதிலேதான் வந்தார். ஆகவே, எல்லாவற்றிற்கும் ஒரு நேரம் காலம் இருக்கின்றது. தகுந்த நேரத்தில்தான் அது அது நடைபெறும்.

*கேள்வி : சில ஸமயங்களில் குருவிற்கும் சிஷ்யனுக்கும் இடையே அபிப்ராய பேதம் நிலவுகின்றனவே! இது ஏன்?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஸ்ரீ ரமண மஹரிஷிகளிடம், ஒருவர் இதே கேள்வியைக் கேட்டார். அதற்கு ஸ்ரீ ரமணர், ''குருவிற்கும், சிஷ்யனுக்கும் இடையே அபிப்ராய பேதங்கள் நிலவுவது ஸகஜம்.

ஒவ்வொரு முறையும் அபிப்ராய பேதம் ஏற்படும்பொழுது, சிஷ்யன் குருவை ஸமாதானப்படுத்துகிறான். அப்பொழுது ஸமாதானம் ஏற்படும். மீண்டும் வேறு விஷயத்தில் அபிப்ராய பேதம் ஏற்படும். பின்னர் ஸமாதானம் ஏற்படும். இதைக் காட்டிலும் சிஷ்யன் தன் ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்காரம் செய்ய நாட்டம் செலுத்தி, ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தை அடைவானானால், அப்பொழுது அபேத **பா**வத்தில் எவ்விதமான அபிப்ராயபேதமும் இருக்காது. இதுதான் நிரந்தரமான ஸமரஸத்திற்கான வழியாகும்'' என்றார்.

***கேள்வி : உண்மையான பக்தன் பகவானிடம் பகவத் தரிசனத்திற்காகவோ, தெய்வீக காட்சிகளுக்காகவோ, மோக்ஷத்திற்காகவோ கூட ப்ரார்த்திக்க மாட்டான் என்று தாங்கள் கூறுகின்றீர்களே! ஆனால், மீரா போன்ற ப்ரேம பக்தியின் உச்சத்தில் இருந்தவர்கள்கூட பகவானிடம் 'தரிசனத்தைக் கொடு' என்று ப்ரார்த்திக்கிறார்களே!! ஏன்?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : சித்தசுத்தி, வைராக்யம், மோக்ஷம் இவையெல்லாம் வேண்டுமென்று பக்தி செய்பவர்களும் பக்தர்கள்தான். ஆனால், இவற்றையெல்லாம் எதிர்பார்க்காமல் பகவானை பகவானுக்காக மட்டும் பக்தி செய்பவர்கள் உயர்ந்த பக்தர்கள். இந்த நிலையில் இருந்தவர்கள்தான் மீரா போன்றவர்கள். ஒரு உதாரணம் சொல்லவேண்டுமென்றால், ஒரு பெண்ணின் காதலன் ஒரு உயர்ந்த பதவியில் இருக்கின்றான். அவனிடம் ஏதோ சில கார்யங்கள் ஆகவேண்டும் என்பதற்காக அவனது வருகையை எதிர்பார்த்து சிலர் காத்திருக்கின்றார்கள். இவர்கள் இறைவனிடம் சித்தசுத்தி, வைராக்யம், மோக்ஷம் போன்றவற்றை வேண்டும் பக்தர்களைப் போன்றவர்கள்.

ஆனால், அந்த காதலி அந்த அதிகாரியை எதிர்பார்ப்பது எதற்காக? அந்த அதிகாரியிடம் பேசி, பழகி அவனுடன் சந்தோஷத்துடன் இருப்பதற்காகத்தான். அவளுக்கு அவனிடமிருந்து ஆகவேண்டியது ஒன்றுமில்லை. அதுபோலவே மீரா போன்ற உயர்ந்த நிலையிலிருந்த பக்தர்களும் பகவானிடம் பக்தி செய்தது பகவானுக்காகவே!

***கேள்வி : ஸ்ரீமத் பாகவதத்தில் ஏகாதஶ ஸ்கந்தத்தில் மூன்றுவிதமான பாகவதர்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளதே! அவை யாவை?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : முதல் நிலையிலுள்ள பாகவதர்கள் தங்களுக்கு இடையூறு செய்பவர்களுக்கு தீங்கு நேரவேண்டும் என்று பகவானிடம் ப்ரார்த்தனை செய்வார்கள். அடுத்த நிலையில் உள்ளவர்கள் தங்களுக்கு இடையூறு செய்பவர்களுக்கு தீங்கு நினைக்காமல், தங்களுக்கு சௌக்யம் ஏற்படவேண்டும் என்று மட்டும் பகவானிடம் ப்ரார்த்தனை செய்வார்கள். இவர்களும் பாகவதர்களே! ஆனால், உத்தம பாகவதர்களோ, தங்களுக்கு எவ்வளவுதான் இடையூறுகள் ஏற்பட்டாலும் அவற்றைப் போக்க வேண்டும் என்று பகவானிடம் ப்ரார்த்தனை செய்யாமல், தங்களுக்கு சௌக்யம் ஏற்படவேண்டும் என்றும் ப்ரார்த்திக்காமல் அனைத்தும் பகவான் இஷ்டம் என்று இருப்பார்கள்.

***கேள்வி : நான் க்ருஷ்ணனை இஷ்ட தெய்வமாக நினைத்து பூஜித்து வருகிறேன். வேறு தெய்வங்களை நான் பூஜை செய்ய வேண்டுமா?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : உண்மையான க்ருஷ்ண பக்தனுக்கு வேறு தெய்வத்திடம் மனம் செல்லாது.

---

## ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜெயந்தி மஹோத்ஸவம்
### நவம்பர் - 4-ந் தேதி - ஐப்பசி ஸ்வாதீ

**நவம்பர் 1, 2, 3 தேதிகள்**

பாரதம் முழுவதிலுமிருந்து நாற்பது வித்வான்கள் கலந்து கொள்ளும் ''வாக்யார்த்த வித்வத் ஸதஸ்'' நடைபெறும்.

**நவம்பர் 4-ந் தேதி — ஸ்ரீஸ்வாமிகளின் திருநக்ஷத்ரம்**

**<u>நிகழ்ச்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| காலை 10 மணி | - | ஹோமங்கள் |
| மாலை 5 மணி | - | ஸ்ரீ ''கதரி கோபால்நாத்'' அவர்களின் "Saxophone" கச்சேரி |

# வேத கதைகள் - 65

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## அக்னி ஜ்வாலை

விச்வரூபன் என்கிற த்வஷ்டாவின் பிள்ளை இந்திரனால் கொல்லப்பட்டான். பிள்ளையை இழந்த த்வஷ்டா கோபம் கொண்டு இந்திரனை விலக்கி ஸோம யாகம் செய்வதற்கு முயற்சித்தார். அந்த யாகத்தில் தன்னை அழைக்க வேண்டும் என்று இந்திரன் கூறினான். அதற்கு த்வஷ்டா, ''என் பிள்ளையை கொன்றவன் நீ'' என்று கூறி இந்திரனை அழைக்கவில்லை. அப்பொழுது இந்திரன் யாகத்திற்கு இடையூறை ஏற்படுத்தி பலாத்காரமாக ஸோமரஸத்தைக் குடித்தான். இந்திரனால் பலாத்காரமாக குடிக்கப்பட்ட ஸோமரஸத்தில் சிறிது மீதி இருந்தது. அதை எடுத்து த்வஷ்டா ஆபிசாரம் செய்வதற்காக ஆஹவனீயத்தை அடைந்து, ஹோமம் செய்து இந்திரனுக்கு விரோதியை உண்டு பண்ணுவதற்கு முயற்சி செய்தான். அந்த ஹோமத்தில் இந்திரனைக் கொல்லக்கூடிய ஒரு புருஷன் வளரவேண்டும் என்ற பொருள் உள்ள மந்திரத்தைக் கூறி ஹோமம் செய்தார்.

தீயே, இந்திரனைக் கொல்லக்கூடிய ஒரு புருஷராக ஆகி வ்ருத்தி அடைவாயாக என்று வேண்டினார். ஹோமத்தின் மகிமையால் அக்னியானவர் அதிகமான ஜ்வாலை உள்ளவராக ஆகி இந்திரனை கொல்வதற்கு முயற்சித்தாரோ இல்லையோ அதற்குள் அக்னியானவர் தானாகவே ஜ்வாலை அடங்கியவராக ஆனார். அக்னி ஜ்வாலை எழும்பவில்லை, இது த்வஷ்டா சொன்ன மந்திரத்தின் தோஷத்தால் ஏற்பட்டது. த்வஷ்டா ''இந்த்ர ஶத்ருர் வர்த்தஸ்வ'' என்ற மந்திரத்தை ஸ்வரப் பிழையுடன் கூறியதின் விளைவு.

பொதுவாக, யாகம் செய்பவன் ஹோமம் செய்யும்பொழுது ஒரு பிழையும் இல்லாவிடில் அக்னி நல்ல ஜ்வாலையுடன் விளங்குவான். அக்னியில் நல்ல ஜ்வாலை எழும்பினால், செய்யும்

கார்யம் நல்ல பயனை அளிக்கும். பிழை இருந்தால் ஜ்வாலை எழும்பாது. அதனால், யாகம் செய்பவனுக்கு பயன் கிடைக்காது என்று அறிந்து எழும்பவில்லை. எப்படி இருந்தாலும் அக்னியானவர் ஒரு புருஷ உருவத்துடன் தோன்றினார். தோன்றும் பொழுதே அக்னி ஹோமங்களை அணுகினார். பொதுவாக, தணல்களை நாம் அக்னி என்று கூறுகிறோம். தணல்களாகிற அக்னி வேறு; தணல்களுக்கு தலைவனான் அக்னி என்ற தேவதை வேறுபட்டதாகும். புருஷ உருவம் எடுத்த அக்னியாவனர் ஹோமங்களுக்கு ஆதாரமான தணல்களாகிற அக்னியையும் ஹோமமம் செய்யப்படுகிற ஸோமரஸத்திற்கு அபிமானியான ஸோமதேவனையும் தன் வாயால் விழுங்கி இரு கடைவாய் பற்களால் கடித்தான்.

அந்த புருஷனான அக்னி அம்பு எய்தால் எவ்வளவு தூரம் செல்கிறதோ அவ்வளவு தேசத்தில் எல்லா திக்குகளிலும் பரவி ஒவ்வொரு நாளும் வளர்ந்தான். இவ்விதம் வளர்ந்து எல்லா உலகங்களையம் மறைத்ததால் இந்த புருஷனுக்கே வ்ருத்ரன் என்ற பெயர் ஏற்பட்டது. அந்த வ்ருத்ரனைக் கண்டு இந்திரன் பயந்தான். மூன்று உலகங்களும் இந்த வ்ருத்ரனால் மறைக்கப்பட்டபொழுது இந்திரன், த்வஷ்டா இருவர்களுக்கும், நிற்பதற்குகூட இடமில்லாமல் போய்விடும் என்ற காரணத்தால் இருவருக்கும் பயம் ஏற்பட்டது.

அப்பொழுது த்வஷ்டா அந்த வ்ருத்ரனை கொல்வதற்கு இந்திரனுடன் நட்பு ஏற்படுத்திக்கொண்டு ஜலத்தால் அபிமந்த்ரணம் செய்து, வஜ்ரத்தை ஜலத்தில் நனைத்து, வ்ருத்ரனை கொல்வதற்காக இந்திரனிடம் அளித்தான். இந்திரன் பயத்தால் அந்த வஜ்ரத்தை உயர்த்த சக்தி அற்றவனாக ஆனான். இந்திரனால் வ்ருத்ரன் மேல் வஜ்ரத்தை போடமுடியவில்லை. அப்பொழுது, அங்கு விஷ்ணு என்ற தேவதை தோன்றினார். அப்பொழுது, ‘‘ஓ விஷ்ணுவே, நீ எனக்கு உதவி புரிவாயாக. நாம் இருவரும் சேர்ந்து வ்ருத்ரனை கொல்லுவோம். பயத்தால் என் கையை உயர்த்த முடியவில்லை’’ என்றான் இந்த்ரன். அப்பொழுது விஷ்ணுவானனர் மூன்று உருவமெடுத்து உலகை பாதுகாப்பதற்காக மூன்று உலகங்களிலும் மூன்று உருவங்களை வைத்தார். வ்ருத்ரன் உடல் எங்கும் பரவி

இருப்பதால் அவனை அடக்க பகவான் விச்வரூபம் எடுத்தார். விஷ்ணுவால் பூமியில் அவருடைய மூர்த்தி வைக்கப்பட்டது. அந்த உருவத்தின் உதவியுடன் இந்திரன் விஷ்ணுவிற்கு பின்புறமாக நின்றுகொண்டு, வஜ்ரத்தை உயர்த்தினான். அப்பொழுது, வ்ருத்ரன் பயந்தவனாக, ''ஓ இந்திரனே! என்னை அடிக்காதே. பூமியில் பரவிய என் சக்தியை உனக்கு அளிக்கிறேன் என்று கூறி பூமியில் உள்ள முழுமையான சக்தியை இந்திரனுக்கு அளித்தான். இந்திரனும் பெற்றுக்கொண்டான். ஏற்றுக்கொண்டு, ''ஓ, விஷ்ணுவே, என்னை தாங்குவாயாக. இந்த வ்ருத்ரன் வீர்யத்தை உனக்கு அளிக்கிறேன்'' என்று கூறி விஷ்ணுவிற்கு அளித்தான். விஷ்ணுவும், ''பிறகு இந்த சக்தியை இந்திரனுக்கே அளித்துவிடுவோம்'' என்று எண்ணி இந்திரனுக்காக அந்த சக்தியை பெற்றுக்கொண்டார். இவ்விதம், அந்தரிக்ஷத்தில் உள்ள தன் சக்தியை கண்டு பயந்து வ்ருத்ரன் இந்திரனுக்கு அளித்தான்.

மூன்றாவது தடவையாக எந்த சக்தியால் நான் எங்கு பரவி இருக்கிறேனோ எல்லாவற்றையும் உன்னிடம் அளிக்கிறேன். ஆனால், நாம் இருவரும் ஒரு உடன்படிக்கை செய்துகொள்வோம் என்று கூறினான். ''ஓ, இந்திரனே, உனக்குள்ளேயே நான் நுழைந்து விடுகிறேன். எங்கும் பரவக்கூடிய, என் சக்தி எல்லாவற்றையும் உனக்கு அளித்துவிட்டபடியால் நான் இருப்பதற்கு இடமில்லை. ஆதலால், உன் உருவத்தில் நுழைவதைத் தவிர வேறுவழியில்லை'' என்று வ்ருத்ரன் இந்திரனை வேண்டினான்.

அப்பொழுது இந்திரன் பயந்தவனாக, ''நீ என்னையே விழுங்கப்பார்க்கிறாயா?'' என்று வ்ருத்ரனை கேட்டான். அப்பொழுது, ஓ இந்திரா, பயப்படாதே, நான் உன்னை விழுங்கமாட்டேன். நான் உன் வயிற்றில் இருந்துகொண்டு ஜடாராக்னியை வளர்ப்பேன். அது உனக்கு பலவிதமான உணவுகளை உண்ண உபயோகப்படும்'' என்று கூறி இந்திரன் வயிற்றுக்குள் நுழைந்தான். இந்திரன் வயிற்றில் நுழைந்து பலவிதமான உணவுகளை உண்ணப் போதுமான இடைவெளிகளாக ஆனான். உலகில் பசிதான் பெரிய விரோதி. இந்திரனுக்கு விரோதியான வ்ருத்ரன், இந்திரன் வயிற்றுக்குள்

இருந்துகொண்டு பசியை கிளப்பிவிடுவதால் மனிதர்களுக்கு பசிதான் பெரிய விரோதியாக ஆகிறது.

இந்த கதை க்ருஷ்ண யஜுர் வேதம் இரண்டாவது காண்டம் 4-வது ப்ரச்னத்தில் இருக்கிறது. த்ரைதாதவிய இஷ்டி என்ற இஷ்டியை வேதம் விவரிக்கும் இடத்தில் இந்த வரலாறு கூறப்பட்டிருக்கிறது. வ்ருத்ரன் தன் சக்தியை மூன்று தடவையாகக் கொடுத்தான். இந்திரனும் மூன்று தடவை பெற்றுக்கொண்டான். இந்த இஷ்டியிலும் மூன்று ஹவிஸ்ஸுகள். இந்த யாகத்தில் த்ரைதாதவியம் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த யாகத்தில் ஆயிரம் பசுக்கள் தக்ஷிணையாக அளிக்கப்பட வேண்டும். ஒரு யாகம் செய்வதாக ஸங்கல்பம் செய்தபிறகு செய்ய முடியாவிடில் அதற்கு ப்ராயச்சித்தமாக இந்த இஷ்டி செய்ய வேண்டும் என்று இருக்கின்றது.

---

ஸனாதனப்புதிர் - பகுதி 18க்கான பதில்கள்

1. தாருகன், 2. வஜ்ரன், 3. அர்ஜுனனால் - இந்திரப்பிரஸ்தத்தில், 4. ஜரை,
5. சமந்த பஞ்சகம் என்ற குருக்ஷேத்ரம், 6. பிரபாஸ க்ஷேத்திரம்,
7. 106 வருடம் 3 மாதம்

   பாண்டவர்கள் ஹஸ்தினாபுரம் வந்தபொழுது யுதிஷ்டிரர் வயது 16, திருதராஷ்ட்ரனுடன் ஹஸ்த்னாபுர வாசம் 13 ஆண்டுகள், அரக்கு மாளிகை ½, ஏகச்சக்ரபுரம் ½, பாஞ்சால மன்னன் வீட்டில் 1, பின்பு மீண்டும் திருதராஷ்டிரனுடன் 5, இந்திரப்ரஸ்தம் தனி அரசு 23, வனவாஸமும் அக்ஞாத வாசமும் 13, குருக்ஷேத்திர யுத்தத்திற்கு பின் அரசாட்சி 36 ஆண்டுகள், மொத்தம் 108 ஆண்டுகள்.

   க்ருஷ்ணன் வயது யுதிஷ்டிரரைவிட 1¾ வருடம் குறைவு. அர்ஜுனனைவிட 3 மாதம் அதிகம். ஆகையால் க்ருஷ்ணன் வயது 106 வருடம் 3 மாதம்.
8. ஆட்டுக் கடாவின் இரு வ்ருஷணங்களைப் பிடுங்கி இந்திரனுக்கு ஒட்ட வைத்தார்கள்.
9. சீதா, ஊர்மிளா, மாண்டவீ, ச்ருதகீர்த்தி
10. ராமர்-சீதை - லவன், குசன்
    லக்ஷ்மணன்-ஊர்மிளை - அங்கதன், சந்த்ரகேது
    பரதன் - மாண்டவீ - தக்ஷன், புஷ்கலன்
    சத்ருக்னன்-ச்ருதகீர்த்தி - ஸுபாகு, சுருதஸேனன்
11. ப்ருஹத்பலன் 30வது தலைமுறை.

# எந்தரோ மஹானுபாவுலு-55

ஒருநாள் இரவு நித்யானந்தர் மஹாப்ரபுவின் இல்லத்திற்கு செல்கையில் வேண்டுமென்றே இரவு வேளை என்றும் பாராமல் ஜகாயி, மதாயி சகோதரர்களின் வீட்டு வழியாக செல்ல நிச்சயித்தார். பகவன் நாமத்தை உச்சரித்துக்கொண்டே அவர்கள் இருக்கும் கூடாரத்திற்கு முன் மெதுவாகச் சென்றார். இரு சகோதரர்களும் நல்ல போதையில் கட்டிலில் அமர்ந்திருந்தனர். நித்யானந்தரைக் கண்டதும் போதையுடன், ''யார் செல்வது?'' என்று கேட்டனர். நித்யானந்தர் பதிலே சொல்லவில்லை. இதனால் சினந்து மதாயி, ''அடே! யாரது! பதில் கூறவில்லை?'' என்று இரைந்தான்.

நித்யானந்தர் பயமின்றி, ''நான்தான்'' என்றார். இதைக் கேட்ட மதாயி, ''நீ யார்? பெயரைச் சொல். ஏன் இப்படி ராத்திரியில் இந்த வழியாகச் செல்கிறாய்?'' என்று கேட்டான். நித்யானந்தர், ''ப்ரபு வீட்டிற்கு நாம ஸங்கீர்த்தனத்திற்குச் செல்கிறேன். என் பெயர் அவதூத்'' என்றார். இந்தப் பெயரைக் கேட்டு மதாயிக்கு கோபம் வந்துவிட்டது. ''அவதூத்! அவதூத்! பெயர் விசித்திரமாக இருக்கிறதே. இப்படி ஒரு பெயரே கிடையாது. எங்களை கேலி செய்கிறாயா?'' என்று உரக்க கத்தினான். பிறகு கோபமாக அங்கிருந்த, உடைந்த பானை ஓட்டாஞ்சில்லை எடுத்து அவர்மீது பலமாக வீசினான்.

அந்தச்சில் அவரது தலையில் பட்டு ஆழமான காயத்தை ஏற்படுத்தி ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. அவரது சரீரம் முழுவதும் ரத்தத்தால் சிவந்தது. வஸ்த்ரம் சிவந்தது. இத்தனை நடந்தும் நித்யானந்தருக்கு மதாயியின்மேல் கோபமே வரவில்லை. ஆனந்தமாக பகவன் நாமத்தைச் சொல்லிக்கொண்டு பாட ஆரம்பித்தார். ''ப்ரபோ! எனக்கு இந்த சரீரத்தில் காயம் ஏற்பட்டுவிட்டதே என்று சிறிதும் கவலை இல்லை! இந்த ப்ராஹ்மண குமாரர்களின் துர்தசைதான் என்னால் காணச் சகிக்கவில்லை! இப்பொழுது நீங்கள்தான் இவர்களை ரக்ஷிக்க வேண்டும்'' என்று கூறிக்கொண்டு நடனமாடினார்!

இதனால் மதாயிக்கு கோபம் அதிகமாயிற்று. மறுபடியும் அவர்மீது அடிக்க ஓட்டாஞ்சில்லை எடுத்தான். ஜகாயிக்கு என்ன தோன்றியதோ! அவனைத் தடுத்துவிட்டு, ''ஏய்! என்ன செய்கிறாய்! ஒரு ஸன்யாஸியிடம் போய் இப்படி நடந்துகொள்கிறாயே! அவரை அடிக்கலாமா! இது சரியில்லை'' என்று தடுத்தான். மதாயி, ''பின் ஏன் இவன் தன் பெயரை ஒழுங்காக சொல்ல மாட்டேன் என்கிறான்? என்றான். ஜகாயி சொன்னான், ''ஸன்யாசி தன் பெயரை என்னவென்று சொல்வான்! அவதூதர் என்று பார்த்தாலே தெரிகிறதே!'' என்றான்.

மதாயிக்கு அப்படியும் கோபம் தணியவில்லை. நித்யானந்தரோ ஆனந்தக் கூத்தாடிக்கொண்டிருந்ததால் ரத்தம் பெருகி ஓடி பூமியை நனைத்தது. பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பயந்து ஓடி மஹாப்ரபுவிடம் நடப்பதை எல்லாம் கூறினர். அப்பொழுதுதான் மஹாப்ரபு நாம கீர்த்தனத்தை ஆரம்பிக்கத் தயாராக இருந்தார். தனது ப்ராணனை விட அதிகம் நேசிக்கும் நித்யானந்தருக்கு ஏற்பட்ட கதியைக் கேட்டு ப்ரபுவுக்கு தாளவில்லை. தடாலென்று எழுந்துஸம்பவம் நடந்த இடத்திற்கு ஓடினார். அவர் பின்னால் அனைத்து பக்தர்களும் தங்கள் தங்கள் வாத்யங்களுடன் ஓடினர்.

நித்யானந்தர் தலையில் இருந்து பெருகும் ரத்தத்தைப் பற்றி லட்சியம் செய்யாமல் ப்ரேமாவஸ்தையுடன் நாட்டியமாடுவதை கண்டார் ப்ரபு. நித்யானந்தர் சரீரத்திலிருந்து சொட்டும் ரத்தத் துளிகளால் பூமி சிவந்து காணப்பட்டது. இந்த நிலையிலும் ஸுமதுரமாக பகவானின் நாமங்களை பாடிக்கொண்டு ஆடும் நித்யானந்தரைக் கண்டு ப்ரபுவின் ரத்தம் கொதித்தது.

அப்பொழுது அவர் தன்நிலை மறந்து ஆகாயத்தை நோக்கி ''சக்ரம்! சக்ரம்!'' என்று ஹுங்காரத்துடன் கத்தினார். இருபாபிகளை ஸம்ஹாரம் செய்ய ஸுதர்ஸன சக்கரத்தை அழைத்தது போல் இருந்தது அந்தச் செயல். ப்ரபுவின் கோப ஆவேசத்தைப் பார்த்து நித்யானந்தஜி, ப்ரபுவிடம் வினயமாக, ''ப்ரபோ, உங்கள் ப்ரதிக்ஞையை மறந்துவிட்டீர்களா? இந்தப் பாபிகளிடம் உங்களுக்கு ஏற்பட்டுள்ள கோபத்தைத் தள்ளிவையுங்கள். தயைபுரிந்து அவர்களை நீங்கள்

காக்காவிட்டால், வேறு கதியேது அவர்களுக்கு? அவர்கள் உங்கள் க்ருபைக்கு பாத்திரமாக வேண்டியவர்கள். தயை கூர்ந்து அவர்களுக்கு அனுக்ரஹம் செய்ய வேண்டும்'' என்று ப்ரார்த்தித்தார்.

ப்ரபுவின் கோபம் தணியவே இல்லை. இப்படி அவர் கோபித்துக் கண்டறியாத பக்தர்கள் நடுங்கிவிட்டனர். ப்ரபுவின் கோபத்தால் ப்ரளயமே ஏற்பட்டு விடுமோ என்று பயந்தனர். பக்தர்களின் உள்ளத்தில் இனம்புரியாத ஆவேசம் ஏற்பட்டு, அவர்களே ஜகாயி, மதாயி இருவரையும் தாக்க ஆரம்பித்தனர். இரு சகோதரர்களின் சேவகர்கள் நடுங்க ஆரம்பித்தனர்.

நித்யானந்தரோ, கோபமடைந்த முராரிகுப்தா போன்ற பக்தர்களின் கால்களில் விழுந்து சாந்தமாக இருக்கும்படி வேண்டிக் கொண்டார். இதற்குள் சுதர்சன சக்ரம் ஆகாயத்திலிருந்து இறங்குவதை அனைவரும் கண்டனர். எல்லோரும் பயத்தால் நடுங்கினர். நித்யானந்தர் சுதர்சன சக்ரத்தை ஆகாசத்திலேயே நிற்குமாறு தீனமாக ப்ரார்த்தித்துக்கொண்டார். ''ப்ரபோ! இந்த யுகத்தில் நீங்கள் பாபிகளை தண்டிக்க மாட்டேன், ஸம்ஹரிக்க மாட்டேன், திருத்தி ஆட்கொள்வேன் என்று உறுதி அளித்துள்ளீர்களே! அதை மறந்து எதிரில் நிற்கும் பதிதர்களை தண்டிப்பீர்களா? பதிதபாவனர் என்ற தங்களது நாமத்துக்கு களங்கம் ஏற்படுத்துமாறு செய்யாதீர்கள். ஜகாயி உங்களுக்கு ஒரு அபராதமும் செய்யவில்லை. மாறாக அவன் மதாயியை என்னை அடிக்காமல் இருக்குமாறல்லவா தடுத்தான். இரண்டாம்முறை என்னை அடிக்காமல் மதாயியை அவன்தான் தடுத்தான். அவன் என்னை ரக்ஷித்தான், அவன் தோஷமற்றவன்'' என்றார்.

ஜகாயி ஸ்ரீபாதரை ரக்ஷித்தான், மதாயியிடமிருந்து காத்தான் என்று கேட்டதும், ப்ரபு அடைந்த ப்ரஸன்னத்துக்கு எல்லையே இல்லை. அவரது உடல் முழுவதும் புளகாங்கிதமாயிற்று. ப்ரேமையுடன் சென்று ஜகாயியை ஆரத்தழுவிக்கொண்டார். ''நீ என் சகோதரனைக் காப்பாற்றினாயா! நீதான் என் நிதாயியின் ரக்ஷகனா! நீ என் அன்புக்கு பாத்திரமானவன்'' என்று அவனை இறுக அணைத்துக் கொண்டார்.

ப்ரபுவின் ஆலிங்கனத்தால் ஜகாயி அசேதனமாகி மூர்ச்சை அடைந்து அவரது பாதங்களில் விழுந்து புரண்டான். அவன் உள்ளத்தில் உறைந்திருந்த பாபங்கள் ப்ரேமை என்ற அக்னியில் உருகிய பனிபோல் கரைந்து கண்ணீராகப் பெருகியது. குலுங்கி குலுங்கி அழுதான். தனது சகோதரனின் இந்த நிலையைக் கண்ட மதாயியின் மனதிலும் பச்சாதாப ஜ்வாலை வீசியது. வெட்கத்தால் தலைகுனிந்து அவனும் கண்ணீர் பெருக்கிக்கொண்டு, ''ப்ரபோ! நாங்களிருவரும் ஸமானமாகத்தான் பாபங்கள் செய்திருக்கிறோம். ஒருவனுக்கு நீங்கள் சரணத்தில் அபயம் தந்துவிட்டீர்கள். என்னையும் ஏற்று மன்னியுங்கள்'' என்று கூறி ப்ரபுவின் பாதங்களில் வீழ்ந்தான். நதியா நகரத்து ஜனங்கள், இந்த இரு சகோதரர்களும் இப்படி கர்வபங்கமாகி வினயத்துடன் வீழ்ந்து புரள்வதைப் பார்த்து வாய்பிளந்து நின்றனர்.

மதாயியிடம் ப்ரபுவுக்கு இன்னும் கோபம் தணியவில்லை. ''மதாயி! உன்னை நான் மன்னிக்க மாட்டேன்! நான் என்னிடம் அபராதம் செய்பவனிடம் கோபித்துக்கொள்ளவே மாட்டேன். ஆனால், நீ ஸ்ரீபாதரிடம் அல்லவா அபராதம் செய்துள்ளாய்! அவர் உன்னை மன்னித்தால்தான் நான் மன்னிப்பேன். நீ அவரிடம் சரண் புகுந்துகொள்'' என்றார்.

உடனே மதாயி, நித்யானந்தரின் சரணங்களின் வீழ்ந்து பொங்கி பொங்கி அழுதான். தனது செயலை நினைத்து வெட்கப்பட்டான். நெஞ்சில் அறைந்து கொண்டு அழுதான். கல்லும் கரைந்துவிடும் போன்ற அவனது கதறலைக் கேட்டு நித்யானந்தர் பொறுப்பாரா? மஹாப்ரபு, நித்யானந்தரிடம் நெருங்கி. இப்பொழுது, ''ஸ்ரீபாத், மதாயி உங்களுக்கு அபராதம் செய்தான். மன்னிப்பு கேட்கிறான். அவனை மன்னிக்கும் திறன் என்னிடம் இல்லை. நீங்கள்தான் அவனைக் காக்க வேண்டும்'' என்றார்.

உடனே நித்யானந்தர், ''பார்த்தீர்களா! ப்ரபு! நீங்கள் இப்படித்தான் உங்கள் கீர்த்தியை எங்கள் மீது கட்டுகிறீர்கள். இவனை உத்தாரணம் பண்ணும் புகழை ஏன் என்மீது திணிக்கிறீர்கள்? பதிதர்களை பாவனமாக்கும் திறன் தங்களிடம்தான் உள்ளது. மதாயியிடம் எனக்கு அணுவேணும் த்வேஷம் கிடையாது. ஜன்ம

ஜன்மாந்திரங்களில் நான் ஏதேனும் புண்யம் செய்திருந்தால், அவை அனைத்தையும் இந்த சகோதரர்களுக்கு அளிக்கிறேன்! நீங்கள் அவனையும் காப்பாற்றுங்கள்'' என்றார்.

இதைக் கேட்டதும், ப்ரபு ஓடிச்சென்று மதாயியை தன் கைகளால் வாரி எடுத்து வேகமாக ஆலிங்கனம் செய்துகொண்டு, ''மதாயி! நீ எனக்கு அத்யந்த ப்ரியமானவனாகி விட்டாய்!'' என்றார். ப்ரபுவின் ப்ரேமாலிங்கனத்தால் மதாயி அளவில்லாத ஆனந்தத்தை அடைந்தான். நவத்வீபத்தின் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்த அந்த முரட்டு சகோதரர்கள், அபிமானம் அழிந்து, ப்ரபுவின் சரணங்களில் புழுதியுடன் புரண்டு கதறி அழுதுகொண்டிருந்த காட்சி நகர மக்களின் கண்களைவிட்டு அகலவேயில்லை. ப்ரபு அவ்விருவரையும் எழுப்பினார். பக்தர்களை நாமஸங்கீர்த்தனம் செய்யுமாறு பணித்தார். பக்தர்களின் ஸந்தோஷத்திற்கு அளவில்லாமல் போயிற்று. அனைவரும் வாத்ய கோஷங்களுடன்,

***ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।***
***ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥***

என்ற மஹாமந்த்ரத்தை கீர்த்தனம் செய்தனர். ஜகாயி, மதாயி இருவரும் நாம ஸங்கீர்த்தனத்தை கண்டும் கேட்டும் களித்தனர். ''கௌர் ஹரிக்கு ஜய்'' என்ற கோஷம் விண்ணைப் பிளந்தது. அனைவரும் ப்ரபுவின் வீட்டை நோக்கி நாம ஸங்கீர்த்தனத்துடன் சென்றனர். ஜகாயி மதாயி இருவரும் ப்ரபுவைத் தொடர்ந்தனர்!

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

ஒரு நல்ல தந்தை எவ்வாறு தன்னுடைய குழந்தையை கொஞ்சி, அல்லது அடித்து, அல்லது கெஞ்சி, அல்லது பயமுறுத்தி அவனுக்கு எப்படியாவது கல்வி அறிவை புகட்டிட வேண்டும் என்று நினைப்பாரோ, அதுபோல், பகவானும் தன்னுடைய உண்மையான பக்தனுக்கு அவனைத் துன்புறுத்தியாவது ஞானத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்று நினைப்பான்.

- **ஸ்ரீ ஸ்வாமிகள்**

# ஸனாதனப்புதிர் - பகுதி - 19

தொகுப்பு : **''ஆத்ரேயன்'',** சென்னை.

1. கௌதம ரிஷியின் மாணவரான உத்தாங்கன், யாரை திருப்தி செய்வதற்காக, அரக்கர் அரசனான சௌதாசனிடம் சென்று தங்க ஆபரணங்களை வாங்கி வந்தார்?
2. துர்வாஸருக்கும் அஜாமுகிக்கும் பிறந்த குழந்தைகள் யார்?
3. ஜயத்ரதனின் சகோதரர், விருத்க்ஷத்ரனின் புதல்வர் - இவர்பெயர் என்ன? இவர் யாரை மணந்தார்? மஹாபாரதப் போரில் யாருக்காக சண்டை போட்டார்?
4. பீமனுடைய சாரதி (தேர்ப்பாகனின்) பெயர் என்ன?
5. மத்ர தேசாதிபதி அஸ்வபதியின் பெண்ணின் பெயர் என்ன? அவரது மனைவியின் பெயர் என்ன?
6. அகஸ்த்தியர், வசிஷ்டர் இவர்களிடம் பயின்ற ப்ராஹ்மணப் பெண் யார்?
7. தேவலோகத்தில் இருந்து இந்திரன் பூவுலகில் இருந்த ரிஷியை சந்திக்க வந்தார். அந்த ரிஷியின் பெயர் என்ன? அந்த ரிஷி இந்திரனிடம் என்ன சொன்னார்? இது மஹாபாரதத்தில் எங்கு காணப்படுகிறது?
8. இந்திரனின் சாரதியான மாதலி மற்றும் அவரது மனைவியான சுதர்மா, இவர்களது பிள்ளையின் பெயர் என்ன? பெண்ணின் பெயர் என்ன?
9. உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் முக்கிய தருணத்தில் ரதத்தின் சக்கரம் சேற்றில் அகப்பட்டுக்கொண்டு எடுக்கப்பட முடியாத நிலை ஏற்படும் என்று கர்ணனை சபித்த ப்ராஹ்மணர் யார்? அவ்வாறு ஏன் சபித்தார்?
10. மால்வ தேசத்து அதிபதியின் யானையின் பெயர் என்ன? அந்த யானையைக் கொன்றது யார்? இது எதற்காகச் செய்யப்பட்டது?

ஸனாதனப்புதிர் பகுதி 19-க்கான பதில்களை
நவம்பர் 25க்குள் அனுப்ப வேண்டும்.

# சேது பாலம்

ஸ்ரீராமபிரானின் ஆணைக்குட்பட்டு வானரவீரர்களின் அயராத உழைப்பினால் கட்டி முடிக்கப்பட்ட சேது பாலம் பற்றி ஸ்ரீமத் ராமாயண காவியத்தில் வெகு விஸ்தாரமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஆயிரக்கணக்கான வானரர்கள் காடுகளிலும், மலைகளிலும் சென்று ப்ரஹ்மாண்டமான விருக்ஷங்களை வேருடன் பெயர்த்து இழுத்து வந்து ஸமுத்திரக்கரை சேர்த்து அதன்மேல் போட்டு மறைத்தார்கள். அவ்வானர வீரர்கள் மஹாபலசாலிகள். பெரும் மதயானையைப் போன்று திண்தோள்களுடைய அவர்கள் பெரும் பாறைகளை அநாயாசமாகத் தூக்கி ஸமுத்திரத்தில் பந்துபோல் விட்டெறிந்தார்கள். ஸமுத்திர அலைகள் ஆகாயம் வரை எழும்பின. பாறைகள் உடைவதால் உண்டாகும் ஸப்தம் ஸமுத்திரத்தின் ஓசையை அடக்கிவிட்டது. எவ்வித ப்ரயத்தனத்தினாலும் பிறருக்கு அசாத்தியமான அவர்களால் கட்டிய அவ்வியத்தகு பாலத்தின் திறத்தைப் பார்த்து அவர்களே பிரமிப்புற்றார்கள்.

இவ்வியத்தகு பாலம் கட்டிய சம்பவம் நிகழ்ந்திருப்பது சாத்தியமே என்ற ஒரு செய்தி ஆங்கில தினசரி (New Indian Express) 28.9.2002 தேதியில் வெளியாகி இருக்கிறது.

அமெரிக்க தேசிய விண்வெளி கூடத்தாரின் (NASA) டிஜிடல் கேமிராவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போட்டோவில் 30 மைல் நீளம் உள்ள அதிக ஆழம்இல்லாத நீர்ப்பகுதியில் கடலில் அமிழ்ந்திருக்கும் சங்கிலித்தொடர்போல் இணைக்கப்பட்டுள்ள மணல்திட்டுக்களால் ஆனபாலம் இந்தியா - ஸ்ரீலங்காவுக்கு இடையில் பாக் ஜலசந்தியில் இருப்பதை வெளியிட்டிருக்கிறது. அப்பாலத்தின் அமைப்பு, அங்கங்கே திருப்பங்களுடன் கட்டப்பட்டுள்ள விதம் அதை மனிதர்களே நிர்மாணித்ததைக் காட்டுகிறது. மற்றும், பாலத்தின் வயது 17,50,000 வருஷங்களுக்கு முந்தியதாக நம்பப்படுகிறது. ஸ்ரீமத் ராமாயணம் நடைபெற்றதாக கொள்ளப்படும் திரேதா யுகத்தில் (அதாவது 17 லக்ஷம் வருஷங்களுக்கு

முன்னால்) ஸ்ரீராமபிரானின் மேற்பார்வையில் ராமேஸ்வரத்திலிருந்து ஸ்ரீலங்காவுக்கு ஒரு பாலம் கட்டியதாக அதில் கூறப்பட்டுள்ளது என்ற குறிப்பும் அதன் கீழே தரப்பட்டுள்ளது.

ஸ்ரீராமபிரான் அவதரித்து அத்தெய்வப் பிறவியின் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளை நடந்தவாறே அப்படியே தத்ரூபமாக நம் கண்முன்னர் நிறுத்தப் பதிவு செய்யக்கூடிய சாதனங்கள் இல்லாத மிகப் பழமையான காலம். அந்த உன்னத சரித்திரத்தை, புராணம், மற்றும் கவிகள் மூலமாகத்தான் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. ஆயினும், நாம் சந்தேகமற தற்போது ஏற்றுக்கொள்ளும் தற்கால விஞ்ஞானமே ஸ்ரீமத் ராமாயணத்தில் வரும் இவ்வரிய சேதுபாலம் உண்மையை ஒட்டியுள்ளதாக சான்றுடன் விளக்கும்போது, இத்தெய்வ வரலாற்றின் சிறப்பு மேலும் நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்துகிறது.

**– திரு. V. சுந்தரம்**

ஸனாதனப் புதிர் - பகுதி - 18க்கான சரியான
பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்

**முதல் பரிசு ரூ. 250/- (தலா ரூ. 125/-)**

1. K.L. Veeraraghavan, Plot No. 29, Door No.3, Majestic Colony, Valasaravakkam, Chennai - 600 087.
2. S. Saranathan, 10/21, Ranganathan Street, Nehru Nagar, Chrompet, Chennai - 600 044.

**இரண்டாம் பரிசு ரூ. 150/- (தலா ரூ. 50/-)**

1. Tatvamasi, C/o. Madhuramurali Bhavan, Plot No. 590, II Main Road, Ashtalakshmi Nagar, Alappakkam, Chennai - 176.
2. C. Hari, C/o. Madhuramurali Bhavan, Plot No. 590, II Main Road, Ashtalakshmi Nagar, Alappakkam, Chennai - 176.
3. G.S. Suryanarayanan, S/o. M. Ganesh Kumaran, Kapugallu Post, Kodad, Mondalam, Nalgonda Dist. AP. Pin - 508306.

**மூன்றாம் பரிசு ரூ. 100/- (தலா ரூ. 25/-)**

1. S. Shantha, 35, Patel Street, Thenpathi, Sirkazhi - 609 111.
2. K.S. Subramanyan, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 600 004.
3. C. Krishnaswami, 23 (32), Jambulinga Naicka Street, Chennai - 34.
4. R. Jayasankari, 175/3, Chithirai Street, Chinmaya Nagar Stage II, Virugambakkam, Chennai - 92.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 59

நமது இந்து ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த சத்ரபதி சிவாஜியின் குரு, மஹாராஷ்ட்ரா தேசத்தில் ஸஞ்ஜன்காட் என்ற இடத்தில் அவதரித்த ஸமர்த்த ராமதாஸர் ஆவார். அவருக்கு பல சிஷ்யர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் உலக சுகபோகங்களையெல்லாம் துறந்து வைராக்ய சீலர்களாக திகழ்ந்தார்கள். ஸமர்த்த ராமதாஸரின் சிஷ்யர்களுள் ஸ்ரீரங்கநாத கோஸ்வாமி என்ற ஒருவர் இருந்தார். அவர் பெரிய தனவந்தர்.

ஆதலால், எங்கு சென்றாலும் ஸாமரம், பல்லக்கு போன்ற ஸகல வசதிகளுடனும், மரியாதைகளுடனும்தான் செல்வார். விலையுயர்ந்த பட்டு ஆடைகளை அணிந்துகொள்வார். சுருக்கமாகச் சொன்னால், ஒரு ராஜகுமாரரைப் போல் ஸகலவிதமான போகங்களுடன் வாழ்ந்து வந்தார் எனலாம்.

ரங்கநாத கோஸ்வாமியின் இந்த ஆடம்பரமான வாழ்க்கை முறையைக் கண்ட ஸமர்த்த ராமதாஸரின் மற்ற சிஷ்யர்கள் குருவிடம் சென்று அது விஷயமாக புகார் செய்தனர். ஸமர்த்த ராமதாஸர் அவர்களுக்கு ரங்கநாத கோஸ்வாமியின் வைராக்யத்தை புரிய வைக்க எண்ணினார். அப்பொழுது மதியவேளை. ராமதாஸர் ரங்கநாத கோஸ்வாமியை அழைத்து, அவரது பல்லக்கு, ஸாமரம், சத்ரம் ஆகியவற்றை அனுப்பிவிடச் சொன்னார். அவர் அணிந்திருந்த பட்டு ஆடைகளைத் துறந்து, வெறும் கௌபீனம் மட்டும் தரித்துக் கொள்ளுமாறு ஆக்ஞை செய்தார். பின்னர், உச்சிவெயிலில் அதே இடத்தில் அமர்ந்திருக்குமாறு பணித்தார். இதையெல்லாம் ராமதாஸரின் மற்ற சிஷ்யர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். பிறகு ராமதாஸர் தனது சீடர்களுடன் சென்றுவிட்டார்.

குருநாதரின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு, ரங்கநாத கோஸ்வாமி தனது எல்லா வசதிகளையும், மரியாதைகளையும் துறந்தவராய் கௌபீனம் மட்டுமே தரித்தவராய் அந்த இடத்திலேயே அமர்ந்துவிட்டார். அப்போது, அவ்வழியே சத்ரபதி சிவாஜி தனது

படைசூழ வந்தார். அந்த உச்சிவெயிலில் தமது குருநாதரின் ப்ரிய சிஷ்யரான ரங்கநாதகோஸ்வாமி அமர்ந்திருப்பதைக் கண்டு துடிதுடித்துப் போனார். உடனே தமது சேவகர்களை அழைத்து அவ்விடத்தில் ஒரு பந்தல் அமைக்குமாறு பணித்தார். அவருக்கு ஸாமரம் வீச இருவரையும், காவல் காப்பதற்கு இருவரையும் நியமித்தார். அவர் பயணம் செய்வதற்கு ஒரு பல்லக்கையும், பணியாட்களையும் தயார் நிலையில் இருக்கச் சொன்னார்.

மாலையில் வந்தபொழுது ஸமர்த்த ராமதாஸர் தனது மற்ற சீடர்களை நோக்கி, ''நான் கூறியதைப்போல் அவன் பல்லக்கு, சத்ரம், ஸாமரம் ஆகிய அனைத்தையும் துறந்தாலும் அவை அனைத்தும் அவனைத்தேடி வந்ததைப் பார்த்தீர்களா? ஸகல போகங்களுடனும் வாழ்ந்தாலும், வைராக்யத்தில் அவன் யாருக்கும் சளைத்தவன் அல்ல. அவன் முற்பிறவிகளில் செய்த புண்ய பலத்தினால், இந்த பிறவியில் ஸகலவசதிகளையும் அனுபவிக்க வேண்டுமென்று இருப்பதால் அனுபவிக்கின்றான்'' என்று எடுத்துரைத்து அவர்களுக்கு உண்மையைப் புரியவைத்தார். ''அவற்றையெல்லாம் அனுபவித்து கழித்தால்தான் அவனுக்கு மோக்ஷம் கிடைக்கும்'' என்றார்.

முற்பிறவியில் நாம் செய்த பாப, புண்ணியங்களின் பலன் ஆனது, நாம் விரும்பினாலும், விரும்பாவிடினும் நம்மை வந்தடைவது நிச்சயம்.

---

ஒரு மனிதன் இந்த உலகத்தில் ஜீவிக்க வேண்டியதற்கு அவசியமான அனைத்தையும் இறைவன் படைத்து, மனிதனையும் படைத்தான். மனிதனை எதற்காகப் படைத்தான் என்றால், தன்னிடம் பக்தி செய்து, ஞானத்தை அடையவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால், மனிதன், பக்தி செய்யாதது மட்டுமல்லாமல், அதற்கு மாறாக தகாத கார்யங்களில் ஈடுபடுவது என்பது, இறைவனுடைய ச்ருஷ்டியையே கேவலப்படுத்துவது போலுள்ளது.

- **ஸ்ரீ ஸ்வாமிகள்**

# மாலே மணிவண்ணா - 2

– மகாவித்துவான் மயிலம் **திரு. வே. சிவசுப்பிரமணியன்**

எச்செயலைச் செய்தாலும் அதற்கு ஓர் பயன் இருக்க வேண்டும். பயன் இல்லாத சொற்களைப் பேசுதலே மனிதத் தன்மையை இழக்கச் செய்துவிடும் என்று திருக்குறள் சொல்கிறது. ***''பயனில்சொல் பாராட்டுவானை மகன் எனல்; மக்கட் பதடி எனல்''*** பயனில்லாத சொல்லை மிக விரும்பி அடிக்கடி பேசுகின்றவனை 'மகன்' என்று சொல்லாதே. 'மக்களுள் பதர்' என்று சொல்லுக என்றார் வள்ளுவர். 'எனல்' என்ற சொல்லையே முதலில் 'என்று சொல்லாதே' என எதிர்மறையாகவும், பின்னால் 'என்று சொல்லுக' என்று உடன்பாடாகவும் பொருள் கொண்டார். ஒரு சொல்லே போதும்; இங்கேயும் அதிக சொற்கள் வேண்டாம் என்று வள்ளுவர் நினைத்திருப்பார் போலும்.

பேசுவதற்கே இப்படி என்றால் செய்வதற்கு இன்னும் சிறப்பாகப் பயன் கருதவேண்டும் அல்லவா? சொல்லைவிடச் செயல் மிகவும் சிறந்தது. முதல் இல்லாமல் பேசிவிடலாம்; முதல் இல்லாமல் ஒரு செயலைச் செய்ய முடியாது; காலவிரயமும் பொருள் விரயமும் இல்லாமல் ஒரு செயலைச் செய்ய வேண்டும். உலகில் செய்யும் செயல்களுக்கு மட்டுமல்லாமல் இறைவனை வழிபடும் போதும் இதனால் இன்னபயன் என்று சொல்வது ஆழ்வார்கள் நாயன்மார்களது பாசுரங்களில்வரும். பலச்சுருதி இல்லாமல் நூல் எழுதுவதில்லை. மனித இயல்பு எதைச் செய்யச் சொன்னாலும் இதனால் எனக்கு என்ன பயன் என்று கேட்பதுதான்; இதனை அறிந்தவர்கள் அருளாளர்கள்.

''இவை பத்தும் வீடே'', ''ஆயிரத்து அவற்றினுள் இவை பத்தும் வல்லார் அமரரோடு உயர்வில் சென்று அறுவர் தம்பிறவி அம் சிறையே'' என்கின்ற நம்மாழ்வார் திருவாய்மொழிப் பாசுரப்பகுதிகளும், ''இவைபத்தும் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே'' என்ற திருஞானசம்பந்தர் திருப்பதிகக் கடைக்காப்பினையும் இங்கே நினைத்துக் காணலாம்.

இந்த மரபு, தமிழில் சங்ககாலத்திலேயே இருந்துள்ளது. பரிபாடலைப் படிக்கத் தொடங்கிவிட்டோம். பரிபாடலின் பயனை யாரிடம் பெறுவது. யாரை வேண்டுவது என்பதை ஒரு பழம் பாடல் வெண்பா சொல்கிறது. இந்த வெண்பா உரையாசிரியர் பரிமேலழகர் எழுதியதாக இருக்கலாம் என்று தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் நினைக்கிறார்கள். மதுரை, வையை, முருகன், திருமால் என்று பாடிச் சென்றுள்ள பரிபாடலுக்கு அமைந்த பல சுருதி கூட திருமாலை நோக்கிக் கேட்பதாக அமைந்துள்ளதை இங்கு நினைத்தல் வேண்டும்.

அற்புதமான நீலமலை, வெண்மையான பனிமலையாகி இமயமலைமேல் வந்தால் எப்படியிருக்கும்! அப்படியே வெண்ணிற வயிற்றை உடைய கருடாழ்வான் மேலே கார்வண்ணனாகிய நீ வரும் காட்சி உள்ளது. வண்டுகள் இசைபாடிக் கண்ணுறங்கி வளர்கின்ற துழாய்மாலை அணிந்த தோள்களை உடைய பெருமானே! பரிபாடல் என்கின்ற இந்நூலினால் உண்டாகிய நற்பயனை எங்களுக்கு விரும்பி அருள் செய்வாயாக என்று திருமாலை வேண்டுகிறார். 'பரிபாடலின் சீர்ப்பயனை விரும்பி அருள்' என்கின்ற இந்தப்பாடல் இறுதியும் முதலும் சேர்கின்ற பூட்டுவில் பொருள்கோன் ஆகும்.

*''விரும்பி அருள் நீலவெற்பு இமயக்குன்றின்*
*வரும் பரிசு புள்ளூரும் மாலே - சுரும்பு*
*வரிபாடல் இன்சீர் வளர் துளவத் தோளாய்*
*பரிபாடலின் சீர்ப் பயன்''*

என்ற இந்தப்பாடலில் கடைசி வரியை முதல் வரியோடு இயைக்கப் பொருள் நிறையும். பரிபாடலின் சீர்பயனை அருள் என வேண்டுகின்ற இப் பலச்சுருதியை இன்னொரு வகையிலும் இணைக்கலாம். பரிபாடலின் சீர்ப்பயன் மாலேயாகும். அதனை எங்களுக்கு விரும்பி அருள்வாயாக! என்றும் சொல்கிறது இப்பாடல்.

பரிபாடலின் பயன் திருமாலேயாகும். அதனால் துளவத்தோளாய்! அந்தத் திருமாலாகிய பயனை எங்களுக்கு நீ விரும்பி அருள்வாயாக என்பதால் பரிபாடல் வேறல்ல; திருமால் வேறல்ல. பரிபாடலே திருமால் என்று நமக்கு விளங்குகிறது அல்லவா!

சங்ககாலக் கடவுள் வழிபாட்டில் திருமாலைத் தனியே 'விஸ்வரூபமாக' (பெருந்திருவடிவாக) உலகமே உருவமானவனாக வழிபடும் உயர் நிலையை நற்றினைக்குரிய தெய்வ வணக்கத்தில் பார்த்தோம். ஆனால், திருமால் வழிபாடு இரண்டு நிலைகளில் வைத்துப் பேசப்பெறுவதே சங்க மரபு ஆகும். திருமாலைப் பலராமனாகவும், கண்ணனாகவும் வழிபடுவதே சங்ககால வழிபாட்டுநெறி. திருமாலை வாசுதேவனாகிய மூலமூர்த்தியாகவும், பலராமன், கண்ணன் என்ற அவதார மூர்த்திகளாகவும் கண்டு காட்டுகிறது பரிபாடல். அக்காட்சியில் ஒன்றைக் காண்போம். திருமாலின் முன்னால் நின்றுகொண்டு அப்பெருமானது சிறப்புகளை அப்பெருமானை நோக்கிச் சொல்லி வேண்டுகிறது இந்தக் காட்சியைக் காட்டும் முதல்பாட்டு.

ஆயிரம் தலைகளை உடைய ஆதிசேஷன் நின் திருமுடிமேல் குடையாகக் கவிந்து அழகு செய்யப் பெற்றுள்ளாய். காண்போர்க்கு அழகு தரும் அக்காட்சியில் அச்சம் கலவாமல் இல்லை. அச்சத்தைத் தரும் விஷப்பற்கள் நிரம்பிய ஆயிரமாக உள்ள தலைகள் நெருப்பைக் கக்கும் பேராற்றலோடு எம்பெருமானே உன் திருமுடிக்கு மேலாகக் கவிந்துள்ளன. எத்தகைய கொடிய செயல் உடையாரும் உன்னை வழிபடுவார்களிடத்தில் அடங்கி ஒடுங்கி அமைந்து கிடப்பர் என்பதை உன் திருமுடிக்கு மேலாக உள்ள ஆதிசேஷன் மூலமாக அறிவிக்கின்றாய் போலும். திருமகள் தங்கும் அகன்ற திருமார்பினை உடையாய்! துன்பங்களைத் தவிர்க்கும் தோற்றம் அரவை ஒடுக்கி அணையாகக் கொண்டதானால் எல்லார்க்கும் எல்லாச் செல்வங்களையும் எப்போதும் அளிக்கத் திருமகளைத் திருமார்பில் மருவாக அணிந்திருக்கின்றாய்!

குற்றமற்ற வெண்மையான சங்கைப் போன்ற திருமேனி உடையவனும், மிக உயர்ந்த தனது திருத்தோள்களின் மேலே வலப்பக்கத்தில் யானைக் கொடியை உடையவனும், இடப்பக்கத்தில் வளைந்த வாயினை உடைய கலப்பை என்கின்ற ஆயுதத்தை ஏந்தியுள்ளவனும், ஒரு பக்கத்துக் காதில் மட்டும் குழை என்னும் குண்டலத்தை அணிந்திருப்பவனும் ஆகிய பலராமனாக உள்ளவனும் நீயே!

தாமரை மலரைப் போன்ற கண்களை உடையவன் நீ! திருமகள் விரும்பித் தங்கியிருக்கும் அகன்ற மார்பினை உடையவன் நீ! மார்பின் கண்ணே கௌஸ்துபமணி விளங்கும் ஆபரணத்தை அணிந்திருப்பவன் நீ! கரியமலையிலே நெருப்புப் பற்றினாற்போல நீலத்திருமேனியில் சிவந்த பொன்னாடையை அணிந்திருப்பவன் நீ! கருடக் கொடியை உடைய பெருமானே! அந்தணர்களுடைய வேதமானது உனது ஆற்றலால் நிலைபெற்றிருக்கும் இவ்வுலகம், நின் ஏவலால் உனக்கு அடங்கியிருக்கும் தன்மையைக் கூறி உன்னை வாழ்த்தி வணங்கிநிற்கும்.

இந்தத் தோத்திரம் மேலும் செல்கிறது. யானைக் கொடியை உடையவன் பலராமன் என்பது அரிய செய்தி. பலராமனுக்குரியது பனைக்கொடி என்பதைச் சங்கநூல்களும், புராணங்களும் கூறுகின்றன. உழவே உலகத்தை வாழ்விப்பதாதலின் காத்தல் கடவுளாகிய திருமால் பலராமனாகும்போது உழவின் கருவியாகிய கலப்பையை ஆயுதமாக ஏந்தி நிற்கிறார் என்பது உணரத்தக்கது. வைதீக வழிபாட்டுத் தெய்வங்கள் அச்சுறுத்தும் கருவிகளை ஏந்தி நிற்கின்றன என்று தத்துவம் அறியார் கூறுவது வழக்கம். பலராமனோ உலக அச்சை நிலைநிறுத்தும் கலப்பையைத் தாங்கி நிற்கிறார். ஒரு குழை அணிந்தவன் பலராமன் என்பதும் ஒரு செய்தி

சிவபெருமானைக் ''குழை ஒரு காதினானுக்கன்பராம் குணத்தின் மிக்கார்'' என்று பெரியபுராணம் கூறும். உமையொருபாகன் சிவபெருமான். ஒரு காதில் பெண்களுக்குரிய தோடும், ஒரு காதில் ஆண்களுக்குரிய குழை என்னும் குண்டலமும் அணிந்துள்ள பெருமான் ''தோடுடைய செவியன்'' எனறார் திருஞானசம்பந்தர். அதனையொட்டியே திருமாலின் ஆண்சக்தியைப் பலராமனாகவும், பெண்சக்தியைக் கண்ணனாகவும் காண்பதும் ஒரு மரபு. அதனால், அதற்கேற்ப 'காதொரு குழையோன் இளவல்'' என்பது வில்லிபாரதம் கூறுவது. இத்தகைய திருமாலைப் பற்றிய நுட்பமான செய்திகள் சங்க காலத்தேயும் இருந்தவை; வெறும் புராணங்களின் கற்பனை வெளியீடுகள் அல்ல என்பதை அறிந்து கொள்வதே இதன் நோக்கம். ஆணும் பெண்ணும் இணைந்த 'அர்த்தநாரீஸ்வரர்' மூர்த்தம் சிவசக்தி சொரூபம், அதுபோலவே திருமாலும் ஆணும் பெண்ணும் இணைந்த பலராம கிருஷ்ண மூர்த்தம் என்று அறிந்தால்

சைவம், வைணவம் என்ற இரண்டிலும் பரம்பொருள் ஆற்றலும், அருளும் அதாவது ஆண்மையும் பெண்மையும் இயைந்த ஒன்றே என்பது புலனாகும். முடிந்த முடிபு இவ்விரு சமயத்திலும் ஒன்றே என்பதனை நன்கு தெளியப் பரிபாடல் மிகவும் பயன் செய்கிறது.

திருமாலை வழிபடுகின்ற பரிபாடலின் முதல்பாடலை மேலும் தொடர்ந்து காண்போம்.

**(தொடரும்)**

## செய்திகள்

### செப்டம்பர் - 28-ந் தேதி

நமது மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயில் உத்ஸவமூர்த்தி ஸ்ரீ பக்தகுதூஹலன் புரட்டாசி சனிக்கிழமையை ஒட்டி மஹாரண்யம் கிராமத்திற்கு புறப்பாடு கண்டருளினார்.

### அக்டோபர் - 2-ந் தேதி

ஸ்ரீ பகவந்நாம போதேந்த்ராள் ஆராதனையை ஒட்டி, சென்னை ப்ரேமிகபவனத்தில் விசேஷ பஜனை நடைபெற்றது.

### அக்டோபர் 20-ந் தேதி— ராஸபௌர்ணிமா

சென்னை ப்ரேமிகபவனத்தில் ராஸபௌர்ணிமாவை ஒட்டி விசேஷ பஜனை நடைபெற்றது.

### அக்டோபர் 21-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் ப்ரஹ்மஸ்ரீ பண்டிதோத்தம, நீயாயமீமாம்ஸ, வேதாந்த, வித்வத் தல்லஜ, ஸ்ரீமணிதிராவிட் சாஸ்த்ரிகள் அவர்களால் வேதாந்த விஷயங்கள் ப்ரவசனம் நடைபெற்றது.

## ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 10 (தொடர்ச்சி)

ஸ்ரீபாத், பன்ஸீவாலாவைப் பற்றிக் கேட்டதும், போந்து அவரிடம், ''அவன் பெரிய மாலிக்! மிக அழகாக இருப்பான்! தலையில் மயில்பீலி அணிந்துகொண்டு காதில் குண்டலங்கள் தரித்துக்கொண்டு கழுத்தில் வனமாலையுடன் மஞ்சள் பட்டாடையுடனும் ஜோராக இருப்பான். பெரிய பணக்காரன் போல் தோற்றமளிப்பான்!'' என்றான்.

ஸ்ரீபாத் மிகவும் ஆச்சர்யத்துடனும், ஆனந்தத்துடனும் போந்துவை வைத்தகண் வாங்காமல் பார்த்தார். போந்துவுக்கு பொய்யே சொல்லத் தெரியாது என்று அவருக்குத் தெரியும். எனவே, அவரால் இதை நம்பாமல் இருக்க முடியவில்லை. இருந்தும் அவனைப் பரிசோதிக்க எண்ணி, ''சரி போந்து! நீ ஒன்று செய்! ஒருநாள் அந்த நந்தலாலாவை தன் தோழர்களுடன் இங்கு அழைத்து வாயேன்! அவனிடம் என் ஸ்ரீபாதர் உணவருந்த உன்னை ஶ்ருங்காரவடத்துக்கு அழைத்துள்ளார் என்று கூறி இங்கு அழைத்து வா'' என்றார்.

போந்துவுக்கு ஒரே குஷியாகி விட்டது. ''ஏன் வரமாட்டான்? நான் கூப்பிட்டால் அவன் கட்டாயம் வருவான். நான் இங்கு அழைத்து வருகிறேன்'' என்று உற்சாகமாகக் கூறிவிட்டான். அடுத்தநாள் பாண்டீரவனத்திற்குச் செல்லும்பொழுது, போந்து, ''இன்று எப்படியும் நந்தலாலாவிடம் நந்தகிசோர் ஸ்ரீபாதரின் அழைப்பைப் பற்றிக் கூறி அவனை ஆனந்தப்படுத்த வேண்டும்'' என்று நினைத்துக்கொண்டே சென்றான். அதுபோல் நந்தலாலாவிடம் ஸ்ரீபாதரின் அழைப்பைப் பற்றிச் சொன்னான். நந்தலாலாவோ, ''நான் ஒன்றும் அங்கெல்லாம் சாப்பிட வரமாட்டேன்'' என்று மறுத்துவிட்டான். அவ்வளவுதான் போந்துவின் முகம் சுண்டிப் போயிற்று. ''இல்லை நந்தலால், நீ கட்டாயம் வரவேண்டும். நீ வருவாய் என்று நான் என் ஸ்ரீபாதரிடம் சொல்லி விட்டேன்'' என்றான்.

‘‘இல்லை இல்லை! நான் வரமாட்டேன். எனக்கு ஸ்ரீபாதரிடம் என்ன வேலை’’ என்று நந்தலால் அழகாக இடுப்பைக் குலுக்கிக் கொண்டும் வாயைச் சுழித்துக்கொண்டும் சொல்லிவிட்டான்.

போந்துவுக்கு ரோஷமே வராது. ஆனால், இப்போது ரோஷம் வந்துவிட்டது. நந்தலாலாவுடன் அவன் பேசவே இல்லை. தன்னுடைய மாடுகளைப் பிரித்துக்கொண்டு வேறு இடத்தை நோக்கி நகர்ந்தான். ‘‘உனக்கு ஸ்ரீபாதரிடம் ஒன்றும் வேலையில்லை என்றால் எனக்கும் உன்னிடம் ஒன்றும் வேலை இல்லை போ. உனக்கும் எனக்கும் அவ்வளவுதான் தோழமை’’ என்று சொல்லாமல் சொல்வதுபோல் மௌனமாக நகர்ந்தான். அவன் கொஞ்ச தூரம் கூட செல்லவில்லை. நந்தலாலா அவனிடம், ‘‘போந்து! போந்து! இருடா, கொஞ்சம் கேள்’’ என்று கூப்பிட்டான். போந்து ஏன் கேட்கிறான்? அவன் மாடுகளை இன்னும் வேகமாக ஓட்டினான். போந்து கேட்காவிட்டால் பகவான் விடுவானா என்ன? அவனும் பின்னால் ஓடினான்.

(அஹோ! வ்ரஜ நாயகா! உன்னைப் பகவான் என்று கூறவே வெட்கமாக இருக்கிறதே! அனந்தகோடி ப்ரஹ்மாண்ட ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயகர்த்தாவான நீ, ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் யாருடைய அம்சத்திலும் அம்சமோ அப்பேர்ப்பட்ட நீ, இப்படி ஒரு பையனால் என்ன ஆக வேண்டும் என்று அவன் பின் ஓடுகிறாய்! அவன் கோபித்துக்கொண்டதால் த்ரைலோக்ய ஸாம்ராஜ்யம் பறிபோனது போல ஓடுகிறாயே?)

நந்தலாலா ஓடிச் சென்று போந்துவின் முன் நின்றுகொண்டு ‘‘கேளடா’’ என்று கொஞ்சினான். போந்து நிமிர்ந்து பார்த்தான். நந்தலாலாவின் கண்கள் கண்ணீரால் நிரம்பி இருந்தது. ‘‘என்ன?’’ என்றான் போந்து. நந்தலாலா கூறினான், ‘‘போந்து! எனக்கு ஸ்ரீபாதரின் அழைப்பை மறுக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. நான் ச்ருங்கார வடத்துக்குள் வரமாட்டேன் என்றுதான் சொன்னேன். ஏனென்றால், அது ராதாராணியின் இடம். என் அண்ணன்-மார்களுடனும், மாடு மேய்க்கும் மற்ற சிறுவர்களுடனும் அங்கு நான் எப்படியடா வர முடியும்? ஸ்ரீபாதரையே தன் தலையில் தானே சமைத்த உணவை எடுத்துக்கொண்டு இங்கு வந்துவிடச் சொல்லேன். அப்படி செய்தால் நான் அந்த உணவை ஏற்றுக்கொள்வேன்’’

என்றான். போந்து உடனே ப்ரஸன்னமானான். அப்படியே ஓடிச் சென்று விஷயத்தை ஸ்ரீபாதரிடம் சொன்னான்.

அடுத்த நாள் ஸ்ரீபாதர் எல்லாவிதமான உணவுகளை தலையில் சுமந்து கொண்டு பாண்டீரவனம் சென்றார். ராமக்ருஷ்ணர்களுடனும், இடைச்சிறுவர்களுடனும் க்ரீடை கேளிக்கையை கண்டுகளித்தார். அவர்களுக்கு உணவு அளித்து மகிழ்ந்தார். சிறிது நேரத்தில் எல்லாம் மறைந்துவிட்டது. அவ்வளவுதான். நந்தகிசோர்கோஸ்வாமி மூர்ச்சித்து விழுந்தார். அப்பொழுது அவருக்கு ஒரு ஆணை பிறந்தது. ''வருத்தப்படாதே! வீடு திரும்பிச் செல். எனது லீலா ஸ்தலங்களைப் பற்றி வர்ணனை செய்!'' என்ற குரல் அவருக்கு ஒலித்தது! இந்த ஆணையை சிரமேற்கொண்டு நந்தகிசோர்கோஸ்வாமி ஸ்ரீ ப்ருந்தாவன லீலாம்ருதம், ஸ்ரீஸ்ரீரஸகலிகா என்ற இரண்டு க்ரந்தங்களை இயற்றினார். நந்தலாலாவின் லீலைதான் என்னே!

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

## ஸ்ரீ துக்காராம் ஸ்வாமிகளின் அபங்கம்

*தர்மாசே பாளண - கரணே பாஷாண்ட கண்டண*
*ஹேஞ்சி ஆம்ஹா கரணே காம - பீஜ வாடவாவேநாம*
*தீக்ஷண உத்தரே - ஹாதீ கேவுநி பாண பிரே*
*நாஹீ பீடபார - துகா ம்ஹண ஸாநா தோர*

''தர்மத்தை ரக்ஷித்து நாத்திக மதவாதங்களை கண்டிக்க வேண்டும். அனைத்திற்கும் வித்தாகயிருக்கும் பகவந்நாமா எங்கும் பரவவேண்டும். இவற்றை நிறைவேற்றுவதுதான் என் கடமை. கடுமையான வாதங்களையும், நல்ல உபதேசங்களையும் ஆயுதங்களாகக் கொண்டு பெரியவர், சிறியவர் என்று பார்க்காமல் எங்கும் சென்று என் கடமையை நிறைவேற்றுவேன்'' என்கிறார் ஸ்ரீ துக்காராம் ஸ்வாமிகள்.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 86

***திரும்பி யகந்தனை தினமகக் கண்காண்***
***டெரியுமென் றனையென் அருணாசலா***

அஷ்டாங்க யோகம் பயில்கிறவர்களுக்கு யம, நியமங்கள் முக்கியம். பொய் சொல்லாமலிருப்பது, ப்ரஹ்மசரியத்துடனிருப்பது, சுத்தத்துடனிருப்பது, சாஸ்திரங்களில் நம்பிக்கையுடனிருப்பது, இவையனைத்தும் யம, நியமங்களில் சேரும். பின்னர் ஆசனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி என்று அஷ்டாங்க யோகம் பயிலவேண்டும். இப்படி ஸாதனை செய்பவர்களுக்கு ராஜ யோகிகள் என்று பெயர். இவர்களுக்கு யோகாப்யாசத்தினால், மூலாதாரத்திலிருந்து ப்ராணசக்தியானது கிளம்பி ஸஹஸ்ராரம் (தலை) வரை செல்கிறது. அப்படிச் செல்கையில் சுழும்னா நாடியிலுள்ள ஆறு முடிச்சுகளும் ஒன்றன்பின் ஒன்றாக அனைத்தும் அவிழ்ந்துவிடும். இவ்வாறு ப்ராணசக்தி ஸஹஸ்ராரத்தை அடைந்தபின், ஹ்ருதயத்தில் ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் அவர்களுக்கு ஏற்படுகிறது.

ஆனால், ஆத்மவிசாரம் செய்து வருபவர்களுக்கு இப்படி நடப்பதில்லை. அவர்களுக்கு சுழும்னா நாடி மூலாதாரத்திலிருந்து கிளம்புவதில்லை. ஆத்மவிசாரம் செய்பவர்களுக்கு இந்த நாடி ஹ்ருதயத்திலிருந்து கிளம்பி ஸஹஸ்ராரத்திற்கு செல்லும். அதனாலேயே, ஆத்மவிசாரம் பயில்பவர்களுக்கு ஞானமானது, யோகம் பயில்பவர்களைக் காட்டிலும், சுலபத்திலும் சீக்கிரத்திலும் கைகூடும். இதுவே இந்த மார்க்கத்தின் சிரேஷ்டம் (உயர்வு).

ஆத்மவிசாரம் எப்படி செய்வது? எறும்புகள் சாரசாரியாய் ஓரிடத்தில் வருவதாக வைத்துக்கொள்வோம். அந்த எறும்பு வரிசையிலே பின்னோக்கி தொடர்ந்து சென்றோமானால், நாம் அந்த எறும்புப் புற்றை கண்டுபிடித்து விடுகிறோம் அல்லவா? அதுபோலவே, பார்வையை உள்முகமாக திருப்பி, ‘‘திரும்பி

அகந்தனை'' - மனதில் எழும் எண்ணங்களை வெளியில் விடாமல் அவைகளை மடக்கி, திருப்பிக்கொண்டே போனால், மனதின் உற்பத்தி ஸ்தானத்தை அடைந்துவிடலாம். அதுவே ஆத்மஸ்தானம்.

'திரும்பி அகந்தனை' - இப்படி எண்ணங்களுடன் ஓடாமல், (அதன் போக்கிலேயே செல்லாமல்), உற்பத்தி ஸ்தானத்திலேயே அவைகளை ஒடுக்கிவர வேண்டும். தினமகக் கண்காண் - இப்படி விடாமல் மனதை அதன் உற்பத்தி ஸ்தானத்திலேயே ஒடுக்க, ஒடுக்க, மனதிற்கு உற்பத்தி ஸ்தானத்தில் நிற்கும் சக்தி அதிகமாகிவிடும். அதனால் ப்ராணன் (ஸ்வாஸம்) ஆனது பந்தப்படும். இப்படி ப்ராணன் பந்தப்பட, பந்தப்பட ப்ராணன் ஆனது பெரும்பாலும் பிங்கலை எனும் நாடி வழியாகவே ஓடும்.

பிங்கலையில் ஸ்வாஸம் சென்று வருவதால், மிகுந்த நன்மைகள் ஏற்படும். அப்படி பிங்கலையில் ஸ்வாஸம் செல்வதால், மோக்ஷத்திற்கு போகமுடியும் என்னும் நம்பிக்கை பலப்படும். அப்படிப்பட்டவருக்கு, மோக்ஷத்தை அடையவேண்டும் எனும் எண்ணம் மேலும் தீவிரமாகும். மேலும், எத்தனை ப்ரதிபந்தங்கள் (தடைகள்) ஸாதனை மார்க்கத்தில் வந்தாலும், அவற்றையெல்லாம் தீரனாக எதிர்த்து நின்று வெற்றிகொள்வார்.

உலகில் நடக்கும் எந்த விஷயத்தைக் கண்டும் பயப்படாமலிருப்பதும், எதனாலும் கவலைப்படாதிருக்கும் தன்மையும் வந்துசேரும். பிங்கலையில் ஸ்வாஸம் செல்கிறவர்களுக்கு சிறிது ஆகாரம் சாப்பிட்டாலே போதும். பசிபோய்விடும். 2 மணிநேர தூக்கமே அவர்களுக்கு போதுமானதாக இருக்கும். எந்த விஷயத்தையும் அவர்கள் ஞாபகம் வைத்துக்கொள்வார்கள். அவர்களின் குரலில் இனிமை ஏற்படும். உடம்பில் ஒரு shining (ஒளி) ஏற்படும். ஜனங்களை ஆகர்ஷிக்கக்கூடிய தன்மையும், உலகில் தெளிவாக பழகக்கூடிய தன்மையும் ஏற்படும். ஸாதனையில் மேலும் ஊக்கமும், தெளிவும் உண்டாகி, சூக்ஷ்மமான (நுண்ணிய) மனதானது உண்டாகப்பெறும். அப்படி சூக்ஷ்ம மனது ஏற்படுவதால் அப்படிப்பட்டவர்களுக்கு மோக்ஷம் அருகிலிருக்கிறது என்றே அர்த்தம் ஆகும்.

பழங்காலத்து ஓவியங்களைப் பார்த்தால், மஹரிஷிகளை எப்படி வரைந்திருப்பர் என்றால், அவர்களுக்கு வலது பக்கம் 'Y' போல் ஒரு கட்டை இருக்கும். அந்த கட்டையில் தங்கள் கையை ரிஷிகள் வைத்திருப்பர். இதன் தாத்பர்யம் என்னவென்றால், அப்படி வைத்திருப்பவருக்கு ஸ்வாஸம் பிங்கலையிலேயே செல்லும். இது சித்தர்களுக்கு தெரிந்த ஒரு ரகசியம்.

இந்த ப்ராணன், பிங்கலை எனும் நாடி வழியாகச் செல்வதால் இத்தனை நன்மைகள் உண்டு. ஆனால், அது இடகலை எனும் நாடி வழியாகச் சென்றால், என்ன ஆகுமென்றால், எந்த விஷயத்தைப் பார்த்தாலும், துக்கமும், சோம்பேறித்தனமும் இருக்கும். முடியக்கூடிய விஷயத்தில் கூட முடியாது எனும் அதைர்யமிருக்கும். எதிலும் ஒரு பயமிருக்கும். இப்படி அநேகமாக எல்லா ஜீவன்களுக்கு ப்ராணன் இடகலை வழியாகத்தான் ஓடுகிறது. யோகாப்யாசத்தில் முதல் ஸாதனையே இந்த ஸ்வாஸத்தை பிங்கலைக்கு மாற்றுவதுதான். அப்படி மாற்றுவதினாலேயே எல்லாம் சரியாகிவிடும்.

(தொடரும்)

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**நவம்பர் 20-ந் தேதி— அண்ணாமலை தீபம்— விஷ்ணு தீபம்**

சென்னை ப்ரேமிகபவனத்தில் விஷ்ணு தீபம் ஏற்றப்படும். மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலிலும் விஷ்ணு தீபம் ஏற்றப்படும்.

**டிசம்பர் 1-ந் தேதி— கைசிக த்வாதஸீ**

நம் மிஷன் சார்பில் திருமழிசை ஸ்ரீ ஜகந்நாத பெருமாள் திருக்கோயில் கட்டளை நடைபெறும்.

**டிசம்பர் 4-ந் தேதி— சூரிய க்ரஹணம்**

திருவிசநல்லூர் ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் கங்காகர்ஷணம் ஒட்டி, சென்னை ப்ரேமிகபவனத்திலும், மதுரபுரியிலும் விசேஷ பஜனை நடைபெறும்.

**மங்களானி பவந்து**



# ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள்

ப்ரேமிகபவனம்

# மதுரமுரளி

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| | |
|---|---|
| Regd. No. TN / Chief PMG / 156 / 2002 | Licensed to Post without prepayment WPP No. 52 / 2002 |

| | | |
|---|---|---|
| வேணு : 8 | நவம்பர் - 2002 | கானம் : 4 |






Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256. Editor : S. Sridhar.

visit us at www.madhuramurali.org ; e-mail : contact@madhuramurali.org